### வாக்குப் பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள மையத்தில்

# தினமும் 2 முறை ஆய்வு செய்ய - அதிகாரிகளுக்கு தேர்தல் கமிஷன் உத்தரவு!

சென்னை,ஏப்,27-

தமிழக சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஒரே கட்டமாக நடந்தது. மொத்தமுள்ள 5.73 கோடி வாக்காளர்களில், 4.88 கோடி பேர் வாக்களித்தனர். அதாவது, 85.15 சதவீதம் வாக்குகள் பதிவாகியது.

இது 75 ஆண்டுகால தமிழக அரசியலில் இது வரை நடக்காத அதிசயம். தமிழகத்தில் கடந்த 1952ம் ஆண்டு நடந்த தேர்தலில் 56.41 சதவீத வாக்குகள் பதிவாகியது.

2011ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் 78.12 சதவீத வாக்குகள் பதிவாகியது. இதுவே தமிழகத்தின் உச்சபட்ச வாக்குப்பதிவாக இருந்தது. 2021ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்த லில் 72.81 சதவீத வாக்குகள் பதிவாகியது. ஆனால் இதுவரை இல்லாத அளவுக்கு இந்த தேர்தலில் 85.15 சதவீத வாக்குகள் பதிவாகி இருப்பது பெரும் பேசு பொருளாக மாறியுள்ளது.

முதல்முறை வாக்காளர்கள், இளைஞர்கள், பெண்கள் காலையிலே திரண்டு வந்து வாக்களித் தனர். வெளிநாட்டில் வேலை பார்ப்பவர்கள், வெளி மாநிலங்கள், வெளி மாவட்டங்களில் வேலை பார்ப்பவர்கள் என பல்வேறு தரப்பினரும் திரண்டு வந்து வாக்களித்ததால் வாக்குச்சாவடிகள் அனைத்தும் திருவிழா கோலமாக காட்சியளித்தன.

தி.மு.க., அ.தி.மு.க. நாம் தமிழர் ஆகிய கட்சிகளுடன் அரசியலில் புதிய வரவான த.வெ.க.வும் தேர்தல் களத்தில் பயணித்ததால் எப்போதும் இல்லாத அளவுக்கு வாக்குப்பதிவு உயர்ந்துள்ளதாக கருதப்படுகிறது. மேலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தமும் இதற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது.

பல்வேறு கணக்குகள் கூறப்பட்டாலும், வாக்காளர்களின் எழுச்சி வாக்கு சதவீதம் உயர்வுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. குறிப்பாக, 21.67 லட்சம் பேர் கூடுதலாக இந்த முறை வாக்களித்து இருக்கிறார்கள்.

இதற்கிடையே, இந்த உச்சப்பட்ச, வரலாறு காணாத வாக்கு சதவீதம் யாருக்கு சாதகம்? என்ற கேள்வி அரசியல் அரங்கில் பலமாக ஒலிக்க தொடங்கியுள்ளது.

வாக்கு எண்ணிக்கைக்கு இன்னும் 8 நாட்கள் இருக்கும் நிலையில், யாருக்கு வெற்றி என்பது தொடர்பாக வலைத்தளங்களிலும், டீக்கடைகளிலும், ரெயில் நிலையங்களிலும், முடி திருத்தம் கடைகளிலும் பரபரப்பாக விவாதிக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், சட்டசபை தேர்தலில் பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் 62 மையங்களில் வைக்கப்பட்டுள்ளன. அங்கு நவீன கேமராக்கள் மூலம் இரவு, பகலாக தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள மையங்களில் இடங்களுக்கு தகுந்தபடி 3, 4,5 அடுக்கு பாதுகாப்பு போடப் பட்டுள்ளது. ஒவ்வொரு மையத்திலும் 24 மணிநேரமும் சுழற்சி முறையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகிறார்கள். பாதுகாப்பு அரணின் முதல் அடுக்கில் எந்திர துப்பாக்கி ஏந்திய துணை ராணுவப்படை வீரர்கள் உள்ளனர்.

தமிழகம் முழுவதும் வாக்கு எண்ணுமை மைய பாதுகாப்பு பணிக்காக சுமார் 18 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வாக்கு எண்ணும் மையங்களிலும் நவீன கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு இரவு, பகலாக கண்காணிக்கப்படுகிறது. வாக்கு எண்ணிக்கை தினமான வருகிற மே 4ந்தேதி வரை 62 மையங்களும் தீவிர கண்காணிப்பின் கீழ் இருக்கும்.

வாக்கு எண்ணும் மையங்களுக்குள். செல்போன்கள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. வாக்கு எண்ணும் தினத்தில் அந்த மையங்களின் வளாகத்திற்குள் பட்டாசு வெடிக்கவும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தமிழகத்தில் 62 மையங்களில் வைக்கப்பட்டுள்ள வாக்குப்பதிவு இயந்திரங்கள் தினமும் 2 முறை ஆய்வு செய்யப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

★ வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்தவும், வாக்குச்சாவடிகளில் ஏதேனும் முறைகேடுகள் நடந்திருந்தால் அதைக் கண்டறிந்து, தேவைப்பட்ட மறுவாக்குப்பதிவுக்குப் பரிந்துரைக்கவும், படிவம் 17A (வாக்காளர் வருகைப் பதிவேடு) மற்றும் வாக்குப்பதிவு நாளன்று பயன்படுத்தப்பட்ட பிற தேர்தல் ஆவணங்களை வாக்குப் பதிவிற்குப் பிந்தைய சரிபார்ப்பு குறித்த ஒருங்கிணைந்த அறிவுறுத்தல்களை இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு நடைபெற்ற அனைத்து 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும், ஏப்ரல் 24, 2026 அன்று பொதுப் பார்வையாளர்கள் மற்றும் 1,825 வேட்பாளர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலை யில் தேர்தல் நடத்தும் அலுவலர்களால் ஆவணங்கள் சரிபார்ப்பு சுமுகமாக நடத்தப்பட்டது.

தமிழகப் பொதுத்தேர்தலில், மொத்தம் உள்ள 4,023 வேட்பாளர்களுக்கும் சரிபார்ப்பு செயல்முறையில் பங்கேற்பதற்கான விவரங்கள் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டன. ஏப்ரல் 23 அன்று வாக்குப்பதிவு நடைபெற்ற 75,064 வாக்குச்சாவடிகளில், சரிபார்ப்பிற்குப் பிறகு எந்த ஒரு மறுவாக்குப்பதிவும் பரிந்துரைக்கப்படவில்லை.

இரு மாநிலங்களிலும் இந்த முழு செயல்முறையும் காணொளி பதிவு (videographed) செய்யப்பட்டது. சரிபார்ப்பிற்குப் பிறகு, படிவம் 17A மற்றும் தொடர்புடைய பொருட்கள் அனைத்தும் தேர்தல் நடத்தும் அலுவலரின் (RO) முத்திரையிடப்பட்டு மீண்டும் சீல் வைக்கப்பட்டன.

ஏப்ரல் 23, 2026 அன்று வாக்குப்பதிவு முடிந்ததும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் (EVMVVPATs) பொதுப் பார்வையாளர்கள் மற்றும் வேட்பாளர்கள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டு, பாதுகாப்பு அறைகளில் (Strong Rooms) பத்திரமாக வைக்கப்பட்டுள்ளன.

வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளுக்கு இரட்டைப் பூட்டு முறை, 24 மணி நேரமும் சுழற்சி முறையில் இரண்டு அடுக்கு பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு அறையின் கதவுகள்/தாழ்வாரங்களில் சிசிடிவி (CCTV) கண்காணிப்பு உள்ளிட்ட விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (ROs) பாதுகாப்பு அறைகளுக்கு ஒரு நாளில் இருமுறை நேரில் சென்று ஏற்பாடுகளைச் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் (DEOs) தலைமையகத்தில் உள்ள பாதுகாப்பு அறைகளுக்குத் தினமும் ஒருமுறையும், தலைமையகத்திற்கு வெளியே உள்ள அறைகளுக்கு நாட்களுக்கு ஒருமுறையும் நேரில் சென்று ஆய்வு செய்வார்கள்.

பாதுகாப்பு அறைகளைக் கண்காணிப்பதற்காக, அந்த அறைகள் அமைந்துள்ள கட்டிட வளாகத்தில் வேட்பாளர்களின் பிரதிநிதிகள் தற்காலிக முகாம்களை அமைத்துத் தொடர்ந்து கண்காணிக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அமெரிக்க நாடாளுமன்றத்தில்

# எச்.1 பி விசா வழங்குவதை 3 ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்கும் மசோதா தாக்கல்!

## இந்தியர்கள் அதிர்ச்சி!

வாஷிங்டன், ஏப்.27-

எச்1பி விசா வழங்குவதை 3 ஆண்டுகளுக்கு நிறுத்திவைக்க வகை செய்யும் மசோதாவை அமெரிக்க அதிபர் டிரம்ப் அரசு நாடாளு மன்றத்தில் தாக்கல்செய் துள்ளது. இதனால் இந்தி யர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

**இந்தியர்களுக்கு வரப்பிரசாதம்**

அமெரிக்க நிறுவனங்களில் உயர்தகுதி கொண்ட வெளி நாட்டினரை பணியமர்த்துவதற்காக அந்த நாடு எச்1பி எனப்படும் சிறப்பு விசா வழங்குகிறது.

3 ஆண்டுகளுக்கு செல்லு படியாகும் இந்த விசாவை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட் டிக்கவும் முடியும்.

இந்த விசா மூலம் இந்தியா, சீனா உள்ளிட்ட வெளிநாட் டினர் அமெரிக்காவில் பணி வாய்ப்பு பெற்று வருகின்ற னர். அதுவும் இந்தியர்களுக்கு இந்த விசா, ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது.

ஏனெனில் ஆண்டுதோறும் அமெரிக்கா வழங்கும் எச்1பி விசாக்களில் 70 சதவீதத்துக்கு மேல் இந்தியர்களே பதவி பெற்று வருகின்றனர். இதில் பெரும்பாலும் ஐ.டி. போன்ற தொழில்நுட்பத்துறையில் சிறந்து விளங்கும் இந்தியர்கள் பயன்பெறுகின்றனர்.

அமெரிக்காவின் தற்போதைய அதிபர் டிரம்ப் கடந்த ஆண்டு ஜனவரியில் 2வது முறையாக பதவியேற்கும் வரை இந்த விசா வினியோகம் சுமுகமாக இருந்தது.

ஆனால் அவர் பதவியேற்றது முதலே அமெரிக்காவில் குடியேறிய வெளிநாட்டினர் மீது கடுமையான கோபத்தை வெளிப்படுத்தி வருகிறார்.

அத்துடன் அவர்களுக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார். முதலில் சட்ட விரோத குடியேறிகளை நாடு கடத்தி னார்.

அதன் தொடர்ச்சியாக எச்1பி விசா வினி யோகத்துக் கும் கடந்த ஆண்டு இறுதியில் கடுமையான கட்டுப்பாடு களை விதித்தார். குறிப்பாக இந்த விசாவுக்கு 1 லட்சம் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.90 லட்சம்) வரை கட்டணம் விதித்து அதிரடி காட்டினார்.

**இந்தியர்கள் அதிர்ச்சி!**

வெளிநாட்டினரை பணிய மர்த்தும் நிறு வனங்கள் இந்த கட்டணத்தை செலுத்த வேண்டும் என அறிவித்தார். வெளிநாட்டினரை தவிர்த்து விட்டு அமெரிக்கர்களை மட்டுமே பணியமர்த்துவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டதாக அமெரிக்கா அறிவித்தது.

வெளிநாட்டினர் பணிபுரியும் நிறுவனங்களைப்பொறுத்து ரூ.1.75 லட்சம் வரை நிர்ணயிக்கப்பட்டு இருந்த எச்1பி விசா கட்டணம், பல மடங்கு உயர்த்தப்பட்டது இந்தியர்களுக்கு பேரிடியாக அமைந்தது.

குறிப்பாக, அமெரிக்காவில் பணி வாய்ப்பு பெற்று வாழ் வாதாரத்தை பெருக்கும் இளம் தொழில்நுட்ப வல்லு னர்களின் கனவுக்கு பெரும் பின்னடைவாக அமைந்தது.

**அமெரிக்க நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கல்!**

பின்னர் இந்த அறிவிப்பில் சில தளர்வுகள் வழங்கப்பட் டன. அதாவது டாக்டர்கள் மற்றும் ஏற்கனவே எச்1பி விசா வைத்திருப்போருக்கு விலக்கு என சில சலுகைகள் அளித்தாலும் பெரிய அள வில் மாற்றங்களை ஏற்படுத்தவில்லை.

தற்போது இந்த சிக்கலை மேலும் அதிகரிக்கும் வகையில் அமெரிக்க நாடாளுமன் றத்தில் மசோதா ஒன்று தாக் கல் செய்யப்பட்டு உள்ளது.

அதாவது எச்1பி விசா தடை வழங்குவதை 3 ஆண்டுக ளுக்கு நிறுத்தி வைக்க வகை செய்யும் மசோதா ஒன்றை ஆளும் குடியரசுக்கட்சி எம். பி. க்கள் சிலர் தாக்கல் செய்துள்ளனர்.

‘எச் 1பிவிசாமுறை கேட்டை முடிவுக்குக் கொண்டுவரும் சட்டம், 2026’ எனப்படும் இந்த மசோதாவை அரிசோனாவை சேர்ந்த எம்.பி. யெலி கிரேன் தாக்கல் செய்தார். இதை மேலும் 7 எம். பி.க்கள் முன்மொழிந்துள்ளனர்.

எச்1பி விசா திட்டத்தில் பல்வேறு சீர்திருத்தங்களை செய்யவும் இந்த மசோதாவில் பரிந்துரைக்கப்பட்டு இருக் கிறது.

அதன்படி ஆண்டுதோறும் வழங்கப்படும் எச்1பி விசாக்க ளின் எண்ணிக்கையை 65 ஆயிரத்தில் இருந்து 25 ஆயிர மாக குறைக்க வேண்டும். குறைந்தபட்ச ஆண்டு சம்பளம் 2 லட்சம் டாலர் (சுமார் ரூ.1.88 கோடி) நிர்ணயிக்க வேண்டும், விசா பெறுபவர் கள் தங்கள் குடும்பத்தினரை அமெரிக்கா அழைத்து வரக் கூடாது உள்ளிட்ட சீர்திருத்தங்களை செய்ய கூறப்பட்டு இருந்தது.

மேலும் இந்த விசா வழங் குவதில்லாட்டரி முறைக்குப் பதிலாக சம்பள அடிப்படை யில் தேர்வு செய்தல், குறிப் பிட்ட பணிக்கு தகுதிவாய்ந்த அமெரிக்க பணியாளரை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், பணிநீக்கம் எதுவும் நடைபெறவில்லை என்றும் சம்பந்தப்பட்ட நிறுவனம் சான்றளித்தல் கட்டாயம். எச்பி விசா பணியாளர்க ளுக்கு பல பணிகளை வழங்குவதை தடுத்தல், ஆட் தேர்வு நடவடிக்கையில் 3ம் நபர் நிறுவனங்கள் பங்கேற்பதை தடுத்தல் உள்ளிட்ட திருத்தங் களை செய்யவும் மசோதா வழி செய்கிறது.

மசோதா தாக்கல் செய்த யெலி கிரேன் எம்.பி. கூறுகை யில், ‘அமெரிக்க அரசு கடின மாக உழைக்கும் குடிமக்களுக் காகப் பணியாற்ற வேண் டுமே தவிர, மாபெரும் பெரு நிறுவனங்களின் லாப வரம்புகளுக்காக அல்ல. அமெரிக்க மக்கள் தகுதிபெற்ற வேலை களில் இருந்து அவர்களை வெளியேற்றுவதைத் தடுப்பது நமது கடமையாகும்’ என தெரிவித்தார்.

இந்த மசோதா, அமெரிக் கர்களின் வேலைக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதோடு, விசா செயல்முறையில் உள்ள நெறிமுறைகளை வலுப்படுத்தி, அமெரிக்கர்க ளின் வாழ்வாதாரங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் என் றும் அவர் கூறினார்.

### புற்றுநோயால் பாதிக்கப்பட்டவருக்கு

# டைட்டானியம் உலோகத்தில் செயற்கை மார்பு எலும்பு!

## கிண்டி கலைஞர் மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை!

சென்னை, ஏப். 27-

அரியவகை எலும்பு புற்றுநோயால் பாதிக்கப்பட நபருக்கு டைட்டானியம் உலோகத்தில் தயாரிக்கப்பட்ட செயற்கை மார்பு எலும்பை பொருத்தி கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

இது தொடர்பாக மருத்துவமனை இயக்குநர் பார்த்த சாரதி, ஒருங்கிணைப்பு அதிகாரி ரமேஷ் ஆகியோர் கூறியதாவது:

சென்னையைச் சேர்ந்த 59 வயதான ராமசாமி (பெயர் மாற்றப்பட்டுள்ளது), எலும்புகளில் ஏற்படும் அரிய வகை புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சைக்காக சென்னை கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். புற்றுநோயின் தீவிரத்தால் மார்பு எலும்பு சிதைவடைந்து, இடது பக்கம் உள்ள 6 விலா எலும்புகள் மற்றும் நெஞ்சுப் பகுதி வரை நோயின் தாக்கம் பரவியிருந்தது பரிசோதனையில் தெரியவந்தது.

இதையடுத்து, புற்றுநோய் அறுவை சிகிச்சைத் துறை தலைவர் சுஜய் சுசிகார் தலைமையில் மருத்துவர்கள் சக்தி உஷாதேவி, அருள், அருண் விக்டர், அரவிந்த், வரகுண பாண்டியன், சதீஷ், அருண் குமார் மற்றும் மயக்கவியல் மருத்துவர்கள் கார்த்திகேயன், அருள், சுப்பிரமணியன், பவித்ரா அடங்கிய மருத்துவக் குழுவினர் அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டனர்.

இதில், பாதிக்கப்பட்ட மார்பு எலும்பு. விலா எலும்புகள், அதைச் சுற்றியுள்ள மென்மையான திசுக்கள் அகற்றப்பட்டன. இதனால், அப்பகுதியில் 15 × 10 செ.மீ. அளவுக்கு வெற்றிடம் உருவானது. இதையடுத்து, அவரது உடல் அமைப்புக்கு ஏற்ப, 3 டி தொழில் நுட்பம் மூலமாக டைட்டானியம் உலோகத்தில் பிரத்யேகமாக மார்பு எலும்பு வடிவமைக்கப்பட்டு, பொருத்தப்பட்டது. உடலின் மற்ற பகுதியில் இருந்து திசுக்கள் எடுக்கப்பட்டு மார்பில் வைக்கப்பட்டன. சிகிச்சைக்குப் பிறகு அவர் நலமுடன் உள்ளார்.

அரசு மருத்துவமனைகளில் முதல் முறையாக கிண்டி மருத்துவமனையில் தற்போது இந்த அரிய, சிக்கலான உயர்தர அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. தனியார் மருத்துவமனையில் இதை மேற்கொள்ள ரூ.12 லட்சம் வரை செலவாகும். ஆனால், முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மூலம் இலவசமாக செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

### மங்களூரு அருகே கோவில் திருவிழாவில் அதிர்ச்சி!

# நடைபாலம் இடிந்து விபத்து 8 பேர் படுகாயம்!

மங்களூரு, ஏப். 27-

மங்களூரு அருகே திருவிழாவையொட்டி நடைபெற்ற ஊர்வலத்தின் போது நடைபாலம் திடீரென இடிந்து விழுந்த விபத்தில், 8 பேர் படுகாயமடைந்தனர்.

கர்நாடகா மாநிலம் தட்சிண கன்னடா மாவட்டம் புச்செமொகரு பவடபைலு பகுதியில் உள்ள கோவில் ஒன்றில் திருவிழா நடைபெற்று வருகிறது. இதனையொட்டி சாமி சிலைகள் ஊர்வலம் நடைபெற்றது.தகோடு பர்கே அருகே, மிகவும் பழமையான குறுகிய நடைபாலத்தை கடந்து ஊர்வலம் சென்ற போது,திடீரென அந்த நடைபாலம் இடிந்து விழுந்தது. இதில் சாமி சிலைகளை பல்லக்கில் வைத்து சுமந்து சென்ற 8 பேர், கால்வாய்க்குள் விழுந்து, படுகாயம் அடைந்தனர். உடனடியாக அவர்கள் மீட்கப்பட்டு, அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

# விடுமுறை நாளையொட்டி - கன்னியாகுமரியில் குவிந்த சுற்றுலாப் பயணிகள்!

குமரி,ஏப்.27-

சர்வதேச அளவில் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாகத் திகழும் கன்னியாகுமரிக்கு நாள்தோறும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். கோடை விடுமுறை தொடங்கியுள்ளதால் கன்னியாகுமரிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் சூரிய உதயத்தைக் காண ஏராளமான சுற்றுலாப் பயணிகள் குவிந்தனர். அதிகாலை முதல் காத்திருந்த சுற்றுலாப் பயணிகள், கடற்பரப்பில் சூரியன் உதிக்கும் காட்சியை உற்சாகத்துடன் கண்டுரசித்தனர். தொடர்ந்து கடலில் குளித்து மகிழ்ந்த சுற்றுலாப் பயணிகள், பகவதி அம்மன் கோவிலில் தரிசனம் செய்தனர்.

### ஆனைமலை நதிக்கரையில் மலர்ந்த ஆதி நாகரிகம்

# சேத்துமடையில் பிரம்மாண்ட ‘முதுமக்கள் தாழி’ கண்டெடுப்பு!

உடுமலை, ஏப். 27-

நதிக்கரை நாகரிகங்களே மனித குலத்தின் தொட்டில்கள் என்பதற்குச் சான்றாக, மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் மற்றுமொரு வரலாற்றுத் தடம் கண்டறியப்பட் டுள்ளது.

பொள்ளாச்சி தாலுகா சேத்துமடை பகுதியில் கண்டெடுக் கப்பட்டுள்ள பிரம்மாண்ட முதுமக் கள் தாழிகள், இப்பகுதியின் பல்லாயிரம் ஆண்டு காலத் தொன்மையை உலகுக்கு உரக்கச் சொல்லியுள்ளன.


சேர மன்னர்கள் ஆட்சி செய்த மைக்கான வரலாற்றுச் சான்றுகள் ‘பதிற்றுப் பத்து’ பாடல்களில் விரவிக்கிடக்கின்றன. சங்க இலக்கியத் தில் நன்னன் ஆண்ட பகுதியாகக் கருதப்படும் ஆனைமலைப் பிர தேசம், இன்றும் பல வரலாற்று ரகசியங்களைத் தன்னுள் புதைத்து வைத்துள்ளது.

குறிப்பாக, ஆழி யாற்றுடன் கலக்கும் அன்னப் பாறை ஆற்றின் கரையோரங்களில் கற்திட்டைகளும், பெருங்கற்காலச் சின்னங்களும் சிதறிக்கிடக்கின்றன. இந்நிலையில், சேத்துமடை கிராமத்தைச் சேர்ந்த அந்தோணி என்பவரது தோட்டத்தில், ஐந்துக் கும் மேற்பட்ட ஈமத் தாழி சின்னங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் ஒரு தாழி சுமார் ஐந்து அடி உயர மும், நான்கு அடி விட்டமும் கொண்டு வியக்கத்தக்க அளவில் அமைந்துள்ளது. இதன் கழுத்துப் பகுதி சுமார் 3 இன்ச் தடிமனுடன், நுணுக்கமான கைவேலைப்பாடு களுடன் காணப்படுகின்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வே.இ. நாகூர்மீரான்

### ஏப்ரல் 27 (2008)



நீதிக்கட்சியில் இணைந்து, பின்னர் திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் துவங்கிய பின்பு, அதில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட துணைச் செயலாளர், மேலப்பாளையம் நகரச் செயலாளர் என பல பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

நெல்லை மாநகராட்சி உறுப்பினராகவும், மண்டலக்குழு தலைவராகவும், மேலப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**